# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2382/05 - 2024 අප්‍රේල් මස 30 වැනි අඟහරුවාදා - 2024.04.30

2382/05 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 30 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி III - காணிகள்

### காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல.: MCUDP/LA/MUT/(W-14)/14/02.
சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சின் இல.: 4-3/4/2021/LRB/121.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க் காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட் பிரிவின் கீழ் நான், இத்தால் அறிவிக்கின்றேன்.

(பொதுத் தேவையின் விபரம்: கொழும்பு மாநகர் சார்ந்த நகர அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் நிர்மாணிக் கப்பட்டு வருகின்ற புதிய முகத்துவாரம் சுரங்க வடிகாலமைப்பு முறைமை கருத்திட்டத்தின் முடிவில் குறித்த வீடுகளுக்கு செல்வதற்கான பிரவேச வீதிகளைப் பெற்றுக் கொடுக்கும்போதும் கருத் திட்டத்தின் பராமரிப்புப் பணிகளின்போதும் ஏற்படக் கூடிய தடைகளை அகற்றும் பொருட்டு தேவையான காணித் துண்டுகளை அரசுக்கு எடுத்துக் கொள்ளல்)

**எடுத்துக் கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், கொழும்பு பிரதேச செயலாளர் பிரிவில் கொழும்பு மாநகர சபை எல்லைக்குட்பட்ட இல. 17 - அளுத் மாவத்தை கிராம அலுவலர் பிரிவில் அளுத் மாவத்தை கிராமத்தில் அமைந்துள்ள நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட 2024.03.15 ஆந் திகதிய கடத்திரல் வரைபட இல. 520406 (தொகுதி இல. 04, தாள் இல. 1) இல் துண்டு இல. 1 தொடக்கம் துண்டு இல. 8 வரை காட்டப்பட்ட 0.0149 ஹெக்டயார் விஸ்தீரண முடைய கீழ் விபரிக்கப்பட்ட எட்டு (08) காணித் துண்டுகளின் விபரங்கள் பின்வருமாறு:

01. **துண்டு இல. 1**

காணியின் பெயர்: வோல்ஸ் ஒழுங்கையில் வரி மதிப்பீட்டு இல. 80/21/A ஐ உடைய காணி; விபரம்: வீட்டுத்தோட்டம், நிலையான கட்டிடமொன்றின்




*இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

பகுதி காணப்படுகின்றது; உரிமை கோருவோர்: ரீ. பாப்ரா பெரேய்ரா, கே. ஷெரின் பெரேய்ரா மற்றும் ஏ. டிரோன் பெரேய்ரா; விஸ்தீரணம்: 0.0066 ஹெக்டயார்.

02. **துண்டு இல. 2**
காணியின் பெயர்: - ; விபரம்: வீதி; உரிமை கோரு வோர்: தெரியாது; விஸ்தீரணம்: 0.0009 ஹெக்டயார்.

03. **துண்டு இல. 3**
காணியின் பெயர்: வோல்ஸ் ஒழுங்கையில் வரி மதிப்பீட்டு இல. 80/16 ஐ உடைய காணி; விபரம்: வீட்டுத்தோட்டம், நிலையான கட்டிடமொன்றின் பகுதி காணப்படுகின்றது; உரிமை கோருவோர்: மோகன தாஸ் பியான்மதி மற்றும் வை. எம். ஸ்ரீயாலதா; விஸ்தீரணம்: 0.0001 ஹெக்டயார்.

04. **துண்டு இல. 4**
காணியின் பெயர்: வோல்ஸ் ஒழுங்கையில் வரி மதிப்பீட்டு இல. 80/15 ஐ உடைய காணி; விபரம்: வீட்டுத்தோட்டம், நிலையான கட்டிடமொன்றின் பகுதி காணப்படுகின்றது; உரிமை கோருவோர்: வை. எம். ஸ்ரீயாலதா; விஸ்தீரணம்: 0.0025 ஹெக்டயார்.

05. **துண்டு இல. 5**
காணியின் பெயர்: வோல்ஸ் ஒழுங்கையில் வரி மதிப்பீட்டு இல. 80/20 ஐ உடைய காணி; விபரம்: வீட்டுத்தோட்டம், நிலையான கட்டிடமொன்றின் பகுதி காணப்படுகின்றது; உரிமை கோருவோர்: ஏ. அந்தனீ சாமுவேல்; விஸ்தீரணம்: 0.0006 ஹெக்டயார்.

06. **துண்டு இல. 6**
காணியின் பெயர்: வோல்ஸ் ஒழுங்கையில் வரி மதிப்பீட்டு இல. 80/19 ஐ உடைய காணி; விபரம்: வீட்டுத்தோட்டம், நிலையான கட்டிடமொன்றின் பகுதி காணப்படுகின்றது; உரிமை கோருவோர்: பீ. எஸ். கே. ஆசிர்வாதம்; விஸ்தீரணம்: 0.0025 ஹெக்டயார்.

07. **துண்டு இல. 7**
காணியின் பெயர்: வோல்ஸ் ஒழுங்கையில் வரி மதிப்பீட்டு இல. 80/18/A ஐ உடைய காணி; விபரம்: வீட்டுத்தோட்டம், நிலையான கட்டிடமொன்றின் பகுதி காணப்படுகின்றது; உரிமை கோருவோர்: எஸ். பீ. நிரஞ்சலா; விஸ்தீரணம்: 0.0012 ஹெக்டயார்.

08. **துண்டு இல. 8**
காணியின் பெயர்: வோல்ஸ் ஒழுங்கையில் வரி மதிப்பீட்டு இல. 80/17 ஐ உடைய காணி; விபரம்: வீட்டுத்தோட்டம், நிலையான கட்டிடமொன்றின் பகுதி காணப்படுகின்றது; உரிமை கோருவோர்: முகமட் கான்; விஸ்தீரணம்: 0.0005 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்து மூலம் அதிகாரமளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2024 ஆம் ஆண்டு யூன் மாதம் 04 ஆந் திகதி மு.ப. 09.30 மணிக்கு இராஜகிரிய, வெலிக்கடை, ஸ்ரீ ஜயவர்தனபுர மாவத்தை, இல. 3 இல் அமைந்துள்ள இலங்கை காணி அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்தின் கொழும்பு மாநகர் சார்ந்த நகர அபிவிருத்திக் கருத்திட்டத்தின் காணி எடுத்துக் கொள்ளல் அலுவலகத்தில் என் முன் வெளிப்படுத்தும் படியும்

மேலும், அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நட்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும் நட்ட ஈட்டுத் தொகையையும் அத் தொகை கணிக்கப்பட்ட விதத்தையும் 2024 ஆம் ஆண்டு மே மாதம் 31 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும் படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

எச். திலக்கவர்தன,
காணி எடுத்தல் உத்தியோகத்தர்,
கொழும்பு மாநகர் சார்ந்த நகர
அபிவிருத்திக் கருத்திட்டம்,
கொழும்பு பிரதேச செயலாளர்
பிரிவு.

கொழும்பு மாநகர் சார்ந்த நகர அபிவிருத்திக்
கருத்திட்டத்தின் காணி எடுத்துக் கொள்ளல்
அலுவலகம்,
இலங்கை காணி அபிவிருத்திக் கூட்டுத்தாபனம்,
இல. 3, ஸ்ரீ ஜயவர்தனபுர மாவத்தை,
வெலிக்கடை,
இராஜகிரிய.
2024, ஏப்பிறல் 29

EOG 04 - 0236

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.